சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.35/2023

23.03.2026

பி.வா.சா.1 திரு. வடிவேல், த/பெ. நாகராஜ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு திருவாரூர் இந்தியன் வங்கி கிளையில் கணக்கு உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 எனது வங்கி கணக்குக்காக வங்கியிலிருந்து கொடுக்கப்பட்டதுதான். ஆனால் அந்த காசோலையை நான் கையொப்பம் போட்டு யாருக்கும் கொடுக்கவில்லை. வாதி தியாகராஜன் கடை நடத்திவருகிறார் என்றாலும் அவரை எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரிதான். வாதியை எனக்கு நன்கு தெரியும் என்பதன் அடிப்படையில் வாதியிடம் 10.01.2021 அன்று ரூ.1,50,000/-ஐ கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு கைலெட்டர் ஒன்று எழுதிக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. வாதி என்னிடம் பலமுறை பணத்தை திரும்ப கேட்ட நிலையில் நான் காசோலையை கொடுத்து பணமாக்கி கொள்ள அறிவுறுத்தினேன் என்றால் சரியல்ல. காசோலை திருப்பப்பட்டது குறித்து வாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். வாதிக்கு நான் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். காசோலையில் உள்ள கையெழுத்து மோசடி என சொல்லியுள்ளது சம்பந்தமாக காவல்துறையிலோ, நீதிமன்றம் மூலமாகவோ நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். நான் நடவடிக்கை எடுத்தது சபந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிராதை நான் படித்து பார்த்துள்ளேன். பிராதில் நான் கொடுத்த காசோலை போதிய பணமில்லாததால் திருப்பப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் காசோலை திருப்பியதற்கான குறிப்பில் கையெழுத்து மாறுபட்டதாக சொல்லவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக நான் பொய்கட்சி செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. வாதியிடம் 10.01.2021 அன்று பெற்ற கடனுக்கு எழுதிக்கொடுத்த கைலெட்டரை திரும்ப பெற்றுக்கொண்டு தாவா காசோலையை வாதிக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது வங்கி

கிளையிலும் காவல்துறையிலும் காசோலை காணாமல் போய்விட்டதாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காசோலை சம்பந்தமாக எனது வங்கி கிளையில் காசோலை பணமாக்க வந்தால் ஆட்சேபணை இருப்பதாக கடிதம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. உரிய முறையில் பெற்ற கடனை திரும்ப கொடுக்கக்கூடாது என்பதற்காக பொய்கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையை வாதிக்கு நான் கொடுக்கவில்லை என்றும் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்றும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாபடி வாதிக்கு தொகையை பின்வட்டியுடன் திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.